**Judicial Form No.**53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.PC.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.V COURT, COIMBATORE

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC No. 2641 /2022

Depositions of LW 21 Witness for PW13 } Prosecution Witness

Name : திரு.சௌந்தரராஜன்
Father's Name :த/பெ.சுப்ரமணியன்

Village :
Taluk :
Caste
Calling :
Religion :
Age :

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act,1969(Central Act 44 of 1969) on the 15.5.2024.

1) நான் தற்போது நீலகிரி மாவட்ட்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், சைபர் கிரைம் பிரிவில் பணிபுரிந்துரு வருகிறேன். நான் கடந்த 2020 ம் ஆண்டு கோவை மாநகர

Taken down by me in Open Court and read over to the witness in the presence of the accused/accused's pleaded and admitted by the witness to be correct.
/Sd/Thiru.V.L.Santhosh, M.A, B.L,

JUDICIAL MAGISTRATE NO.V,
**COIMBATORE**

மத்திய குற்றப்பிரிவில் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்தபோது காவல் ஆணையர் நமூனா ஆர். சி.நம்பர் G1/23904/2020 நாள் 28.07.2020 ன் படி பி4 உக்கடம் காவல் நிலையக் குற்ற எண். 635/2020, சட்டப்பிரிவு 295, 295-A, 153A, 436 ,இதச வழக்கினை புலன் விசாரணைக்கு நான் எடுத்துக் கொண்டேன்.

2) சாட்சிகள் கணேசன், ராஜகோபால், அன்புவேல், முகமது சலீம், சஞ்சீவ் குமார், ராஜாசெல்வன், முகமது கௌஸ், எஸ்.எம்.நாசர், பழனிச்சாமி, சின்னராயப்பன், இவ்வழக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சாஸ்தா சோமசேகர், இவ்வழக்கை முதல் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ராஜவேல் ஆகியோர்களை விசாரணை செய்து மறு வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். கொரோனா காலம் என்பதாலும், மேலும், நான் பணி மாறுதலில் சென்றதாலும் தொடர் விசாரணைக்காக வழக்கு கோப்பை உதவி ஆணையர் பார்த்திபன் அவர்களிடம் ஒப்புவித்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) சாட்சி முகமது சலீமை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவர் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொன்னாரா அல்லது எதிரியை சம்பவ இடத்தில் பார்த்ததாக

Taken down by me in Open Court and read over to the witness in the presence of the accused/accused's pleaded and admitted by the witness to be correct.
/Sd/Thiru.V.L.Santhosh, M.A, B.L,

JUDICIAL MAGISTRATE NO.V,
**COIMBATORE**

சொன்னாரா என்றால் சம்பவ இடத்திற்கு அருகில் எதிரியை பார்த்ததாக சொல்லியுள்ளார். எரிந்துபோன டயர் துகள்களை கைப்பற்றியதாக அ.சா.12 காவல் ஆய்வாளர் தெரிவித்துள்ள நிலையில், அதை ஆய்வகச் சோதனைக்கு அனுப்பாததது ஏன் என்பது குறித்து விசாரித்தேனா என்றால் அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

2) பால்காரர் மூலமாகத்தான் சம்பவம் குறித்து தனக்கு தெரிய வந்ததாக அ.சா.1 சின்ன ராயப்பன் தெரிவித்துள்ள நிலையில், அவர் சொன்ன பால்காரரை தான் விசாரிக்கவில்லை என்று அ.சா.12 காவல் ஆய்வாளர் தெரிவித்துள்ள நிலையில் நான் ஏதும் விசாரித்தேனா என்றால் இல்லை. கண்காணிப்பு கேமிரா பதிவுகளை நான் பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். கண்காணிப்பு கேமிரா பதிவில் எதிரியை நான் பார்த்தேனா என்றால் தற்போது நினைவில் இல்லை.

3) முதல் தகவல் அறிக்கையில் கந்த சஷ்டி கவசம் குறித்து யு டியுபில் வெளியானது தொடர்பாக நான் ஏதும் விசாரித்தேனா என்றால் இந்த வழக்கில் விசாரிக்கவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் ஏதும் இல்லை என்றும், ஆனால் நான் பொய்யாக

Taken down by me in Open Court and read over to the witness in the presence of the accused/accused's pleaded and admitted by the witness to be correct.
/Sd/Thiru.V.L.Santhosh, M.A, B.L,

JUDICIAL MAGISTRATE NO.V,
**COIMBATORE**

அவருக்கு தொடர்பு இருப்பதாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**/Sd/Sownthararajan**.

**/TRUE COPY/** **Signature of witness**

Taken down by me in Open Court and read over to the witness in the presence of the accused/accused's pleaded and admitted by the witness to be correct.

/Sd/Thiru.V.L.Santhosh, M.A, B.L,

JUDICIAL MAGISTRATE NO.V,
**COIMBATORE**